


02.05.2024

தலைப்புச் செய்திகள்

1. நாடு கடந்த 10 ஆண்டுகளில் மகத்தான மாற்றங்களை கண்டிருப்பதாக பி.ஜே.பி. மூத்த தலைவரும், பிரதமருமான திரு. நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.
2. மத்திய அரசின் தனியார்மயமாக்க நடவடிக்கைகளால் அரசுத்துறை வேலை வாய்ப்புகள் அகற்றப்படுவதோடு இடஒதுக்கீடும் பறிக்கப்படுவதாக காங்கிரஸ் மூத்த தலைவர் திரு. ராகுல்காந்தி குற்றம் சாட்டியுள்ளார்
3. கொடைக்கானல் மற்றும் உதகைக்கு செல்லும் சுற்றுலா பயணிகளுக்கான இ - பாஸ் வழிகாட்டு நெறிமுறைகள் இன்று வெளியடப்படுகின்றன.
4. தமிழ்நாட்டில் வரும் நாட்களில் வெப்பநிலை மேலும் அதிகரிப்பதற்கான வாய்ப்புகள் உள்ளதாக சென்னை வானிலை ஆய்வுமையம் தெரிவித்துள்ளது.
5. சீனா செங்டுவில் தாமஸ் கோப்பை பேட்மிட்டன் ஆடவர் காலிறுதியில் இந்திய அணி - சீன அணியை இன்று எதிர்கொள்கிறது.

இனி விரிவான செய்திகள்

□□□□□□□□

3-ம் கட்ட தேர்தல்

நாடுமுழுவதும் 3-ம் கட்ட மக்களவை தேர்தலுக்கான வாகன பேரணிகள் மற்றும் பிரச்சார பொதுக்கூட்டங்கள் மூலம் வாக்கு சேகரிப்பு நடவடிக்கைகள் தீவிரமடைந்துள்ளன.

தேர்தல் பிரச்சாரம் முடிவடைய 3 நாட்களே எஞ்சியுள்ள நிலையில் வாக்காளர்களை கவரும் வகையில் அரசியல் தலைவர்களும், வேட்பாளர்களும் அனல் பறக்கும் பரப்புரையில் ஈடுபட்டுள்ளனர்.

வரும் 7-ம் தேதி, 93 தொகுதிகளுக்கு வாக்குப் பதிவு நடைபெறும் நிலையில், குஜராத் மாநிலம் அனந்த்தில் தேர்தல் பிரச்சாரக்கூட்டத்தில் இன்று உரையாற்றிய பி.ஜே.பி. மூத்த தலைவரும், பிரதமருமான திரு. நரேந்திரமோடி, தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சியில் கடந்த 10 ஆண்டுகளில் நாடு மகத்தான மாற்றத்தை சந்தித்திருப்பதாக குறிப்பிட்டார்.

சுதந்திர நூற்றாண்டு கொண்டாட்டங்களின் போது வளர்ச்சி பெற்ற நாடாக இந்தியா திகழ வேண்டுமென்பதே தமது விருப்பம் என்றார்.

சர்வதேச பிரச்சனைகளில் இந்தியாவை மத்தியஸ்த நாடாக உலகம் கண்நோக்குவதாக அவர் குறிப்பிட்டார்.

இந்தியாவில் காங்கிரஸ் கட்சி வலுவிழந்து வருவதாக அவர் குறைகூறினார்

சுரேந்திர நகர், ஜுனாகத், ஜாம் நகர் பகுதிகளில் பொதுக்கூட்டங்களில் இன்று பிரதமர் உரையாற்றுவதோடு, வாகன பேரணிகளிலும் பங்கேற்கிறார்.

காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர் திரு. ராகுல்காந்தி வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில் தலித், பழங்குடியினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான இட ஒதுக்கீட்டை பி.ஜே.பி. அரசு பறிப்பதாக குறை கூறியுள்ளார்.

அரசு துறைகளை தனியார் மயமாக்குவதன் மூலம் அரசு வேலைகள் அகற்றப்படுவதாக அவர் குற்றம் சாட்டினார்.

காங்கிரஸ் கட்சி பொதுத்துறையை வலுப்படுத்தி அனைத்து பிரிவினருக்கும் வேலைவாய்ப்புகளுக்கான கதவுகளை திறப்பதோடு 30 லட்சம் அரசு காலிபணியிடங்களை நிரப்பும் என்றும் குறிப்பிட்டார்.

திரு. ராகுல்காந்தி கர்நாடக மாநிலம், ஷிமோகா, ராய்ச்சூர் பகுதிகளில் தேர்தல் கூட்டத்தில் இன்று பரப்புரை மேற்கொள்கிறார்.

பி.ஜே.பி. மூத்த தலைவர் திரு. அமித்ஷா, சமாஜ்வாடி கட்சி தலைவர் திரு. அகிலேஷ் யாதவ், ராஷ்ட்ரிய லோக்தள் தலைவர் திரு. ஜெயன்த் சவுத்ரி, ஆம் ஆத்மி கட்சிக்காக திருமதி. சுனிதா கெஜ்ரிவால் உள்ளிட்டோரும் தேர்தல் பிரச்சாரத்தில் இன்று ஈடுபடுகின்றனர்.

□□□□□□□

ராஜஸ்தான் மறுவாக்குப்பதிவு

இதனிடையே ராஜஸ்தான் மாநிலம் அஜ்மீர் மக்களவை தொகுதிக்கு உட்பட்ட நந்த்சி கிராமத்தில் உள்ள வாக்குச்சாவடி மையத்தில் மறு வாக்குப்பதிவு இன்று நடைபெறுகிறது.

காலை 7 மணிக்கு தொடங்கிய வாக்குப்பதிவு மாலை 5 மணிவரை வாக்குப்பதிவு தொடர்ந்து நடைபெறும்.

தேர்தல் ஆணையத்தின் உத்தரவிற்கு ஏற்ப இங்கு மறு வாக்குப்பதிவு நடைபெறுகிறது.

□□□□□□□

5-வது கட்டம்

இந்நிலையில் பீஹார், உத்தரபிரதேசம், மஹாராஷ்டிரா உள்ளிட்ட 6 மாநிலங்கள், 2 யூனியன் பிரதேசங்களின் 49 மக்களவை தொகுதிகளுக்கு வரும் 20-ம் தேதி நடைபெறும்
5-வது கட்ட தேர்தலுக்கான வேட்பு மனு தாக்கல் நாளை நிறைவடைகிறது.

தெலங்கானா மாநிலத்தில் உள்ள 17 மக்களவை தொகுதிகளுக்கு உட்பட்ட 100க்கும் மேற்பட்ட சட்டப்பேரவை பிரிவுகளில் வாக்குப்பதிவிற்கு கூடுதலாக ஒருமணி நேரம் வழங்கி தேர்தல் ஆணையம் அனுமதி வழங்கியுள்ளது.

தெலங்கானா மாநில தேர்தல் அதிகாரியின் கோரிக்கையை ஏற்று இந்நடவடிக்கை.

இதனையடுத்து நக்சல் தீவிரவாத அச்சுறுத்தல் உள்ள பகுதிகளை தவிர ஏனைய 106 சட்டப்பேரவை பிரிவுகளில் மாலை 6 மணிவரை வாக்குப்பதிவு நடைபெறுகிறது.

□□□□□□□

நீட்

நாடுமுழுவதும் ஆடீடீளு.இ டீனுளு.இ இளநிலை மருத்துவ படிப்புகளில் சேருவதற்கான நீட் நுழைவுத்தேர்வு வரும் ஞாயிற்றுக்கிழமை நடைபெறுவதை ஒட்டி இதற்கான நுழைவுத்சீட்டு தேசிய தேர்வுகள் முகமை இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

557 நகரங்களில் நடைபெறவுள்ள இத்தேர்வை 24 லட்சத்திற்கும் அதிகமான மாணாக்கர் எழுதவுள்ளனர்.

இந்தியாவிற்கு வெளியே 14 நகரங்களில் இத்தேர்வு நடைபெறவுள்ளது.

தேர்வுகள் பிற்பகல் 2 மணிமுதல் மாலை 5.20 மணிவரை நடைபெறும்.

□□□□□□□

பத்ம விருதுகள்

2025-ம் ஆண்டிற்கான பத்ம விருதுகளுக்கு வரும் செப்டம்பர் 15-ம் தேதிக்குள் இணையதளத்தில் விண்ணப்பிக்கலாம் என மத்திய அரசு அறிவித்துள்ளது.

கல்வி, கலை, இலக்கியம், விளையாட்டு மருத்துவம், சமூகபணி உள்ளிட்ட துறைகளில் சாதனை புரிந்தவர்கள் றறற.யறயசனள.பழஎ.iஉ என்ற இணையதளத்தில் விண்ணப்பிக்கலாம்.

□□□□□□□

இ - பாஸ்

கொடைக்கானல் மற்றும் உதகைக்கு செல்லும் சுற்றுலா பயணிகளுக்கான இ - பாஸ் தொடர்பான வழிகாட்டு நெறிமுறைகளை தமிழகஅரசு இன்றுமாலை வெளியிடுகிறது.

இ-பாஸ் நடைமுறைக்காக மாநில தகவல் தொழில் நுட்பத்துறை சார்பில் பிரத்யேக இணையதளமும் வெளியிடப்படுகிறது

வாகனங்களுக்கான அனுமதி, உள்ளூர் வாகனங்களுக்கான நடைமுறைகள் போன்ற விவரங்கள் இந்த வழிகாட்டு நெறிமுறையில் இடம்பெறும் என தெரிகிறது.

உதகை கொடைக்கானல் போன்ற மலைப் பகுதிகளுக்கு செல்ல வரும் 7-ம் தேதிமுதல் அடுத்த மாதம் 30-ம் தேதிவரை இ-பாஸ் கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

□□□□□□□

வாகன பதிவெண் பலகை

வாகன பதிவெண் பலகையில் விதிகளை மீறி ஸ்டிக்கர் ஒட்டப்பட்டிருந்தால் சம்மந்தப்பட்டவர்கள் மீது காவல்துறை மூலம் அபராதம் விதிக்கும் முறை இன்றுமுதல் அமலுக்கு வருகிறது.

முதற்கட்டமாக போலிஸ், பாதுகாப்புதுறை என ஸ்டிக்கர் ஒட்டிய வாகனங்களில் மட்டுமே இன்று ஆய்வு நடத்தவுள்ளதாக காவல்துறை தெரிவித்துள்ளது.

ஊடகங்களில் பணியாற்றுவோர் பெயரில் வாகனம் இருந்தால் அதில் ஊடகம் என்ற ஸடிக்கர் ஒட்டிக் கொள்ளலாம் என காவல்துறை விளக்கம் அளித்துள்ளது.

□□□□□□□

இருவரி

சேலம் மாவட்டத்தில் கோடைகால குடிநீர் தொடர்பான புகார்களுக்கு தாமதமின்றி நடவடிக்கைகளை உடனே மேற்கொள்ளுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. பிருந்தா தேவி அனைத்து துறை அலுவலர்களை அறிவுறுத்தி உள்ளார்.

சிவகங்கை மக்களவை தொகுதியில் வாக்கு எண்ணும் மையமான காரைக்குடி அழகப்பா அரசு பொறியியல் கல்லூரியில் தடையில்லா மின் விநியோகம் மூலம் சி.சி.டி.வி. கேமராக்களால் தீவிர கண்காணிப்பு மேற்கொள்ளப்படுவதாக மாவட்ட தேர்தல் அலுவலர் திருமதி ஆஷாஅஜித் தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் கோடை காலத்தில் சீரான மின்விநியோகத்தை உறுதிசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக்கழகம் தெரிவித்துள்ளது.

கோடை விடுமுறையை ஒட்டி கன்னியாகுமரியில் பயணிகளின் வருகை அதிகரித்துள்ளது.

கடந்த 5 நாட்களில் 32 ஆயிரத்து 500 பேர் விவேகானந்தர் மண்டபத்தை படகில் சென்று பார்வையிட்டுள்ளதாக பூம்புகார் கப்பல் போக்குவரத்து கழக நிர்வாகம் தெரிவித்துள்ளது.

நாமக்கல் மாவட்டத்தில் தொழிலாளர் தினத்தன்று விடுமுறை அளிக்காத 61 நிறுவனங்கள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளதாக மாவட்ட தொழிலாளர் உதவி ஆணையர் தெரிவித்துள்ளார்.

ஈரோடு மாவட்டம் புஞ்சை புலியம்பட்டி மாட்டுச் சந்தையில் மாடுகள் குறைந்த விலைக்கு விற்பனையானதால் விவசாயிகள் கவலையடைந்து உள்ளனர்.

வறட்சி காரணமாக கால்நடைகளை வாங்க விவசாயிகள் மற்றும் வியாபாரிகள் முன்வராததால் மாடுகளின் விலை குறைந்து காணப்பட்டது.

கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூர் அருகே ஒற்றை யானை தாக்கியதில் விவசாயி இன்று உயிரிழந்தார்.

ஜவளகிரி வனசரகத்திற்கு உட்பட்ட பகுதியில் யானை நடமாட்டம் இருப்பதால் பொதுமக்கள் பாதுகாப்பாக இருக்குமாறு மாவட்ட வனத்துறை கேட்டுக் கொண்டுள்ளது.

அரியலூர் மாவட்டத்தில் சமுதாய வளர்ச்சிக்கு சேவையாற்றும் இளையோர் முதலமைச்சர் மாநில இளையோர் விருதுபெற வரும் 15-ம் தேதிக்குள் விண்ணப்பிக்கலாம் என ஆட்சித்தலைவர் திருமதி. ஆனிமேரி ஸ்வர்ணா தெரிவித்துள்ளார்

□□□□□□□

உமா ரமணன்

பிரபல திரைப்பட பின்னணி பாடகி உமா ரமணன் உடல்நலக்குறைவு காரணமாக சென்னையில் நேற்றிரவு உயிரிழந்தார்.

அன்னாருக்கு வயது 69.

பூங்கதவே தாள்திறவாய், பூபாளம் இசைக்கும் உள்ளிட்ட நூற்றுக்கணக்கான திரைப்பட பாடல்களை இவர் பாடியுள்ளார்.

அன்னாரது இறுதிச்சடங்கு சென்னையில் இன்று நடைபெறுகிறது.

□□□□□□□

வானிலை

தமிழ்நாட்டில் அடுத்து வரும் நாட்களில் வெப்பநிலை அதிகரிப்பதற்கான வாய்ப்புகள் உள்ளதாக சென்னை வானிலை ஆய்வுமையத்தின் தென்மண்டல தலைவர் திரு. பாலசந்திரன் தெரிவித்துள்ளார்.

.. வாய்ஸ் ..

இதனிடையே கரூர் பரமத்தியில் அதிகபட்ச வெப்பநிலையாக 44 டிகிரி செல்சியஸ் வெப்பம் இன்று பதிவானது

இது இயல்பை விட 7.2 டிகிரி செல்சியஸ் அதிகமாகும்,

வேலூர், ஈரோடு, திருச்சியில் 43 டிகிரி செல்சியஸிற்கு அதிகமாகவும்,

திருத்தணியில் 42.5 டிகிரி செல்சியசும் வெப்பம் இன்று பதிவானது.

மாநிலத்தில் 10 இடங்களில் அதிகபட்ச வெப்பநிலை 40 முதல் 42 டிகிரி செல்சியஸ் வரை பதிவாகி உள்ளது.

வேலூரில் கடந்த 10 நாட்களாக வெயிலின் தாக்கம் அதிகரித்து காணப்படுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

தமிழக உள்மாவட்டங்களின் அநேக இடங்களில் இன்றும் நாளையும் வெப்பஅலை வீசக்கூடும் என்று முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதனிடையே வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள், அதனை ஒட்டிய மாவட்டங்களில் இன்று இடி, மின்னல், காற்றுடன் மிதமான மழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வுமையம் தெரிவித்துள்ளது.

□□□□□□□

பேட்மிட்டன்

சீன செங்குடுவில் நடைபெறும் தாமஸ் கோப்பை பேட்மிட்டன் ஆடவர் காலிறுதியில் இன்று இந்திய அணி சீன அணியை எதிர்கொள்கிறது.

முன்னதாக நடைபெற்ற இறுதி லீக் ஆட்டத்தில் இந்தியா இந்தோனேஷியாவிடம் 1-4 என்ற கணக்கில் தோல்வியடைந்தது.

□□□□□□□

குத்துச்சண்டை

கஸகஸ்தான் தலைநகர் ஹஸ்தானாவில் நடைபெறும் ஆசிய இளையோர் குத்துச்சண்டை ஆடவர் அரையிறுதிக்கு இந்திய வீரர்கள் ஆரியன், யஷ்வர்தன், பிரியான்ஷு, சாஹில் ஆகியோர் முன்னேறியுள்ளனர்

காலிறுதி 51 கிலோ எடைப்பிரிவில் ஆரியனும்,

63 அரை கிலோ பிரிவில் யஷ்வர்தனும்,

71 கிலோ பிரிவில் பிரியான்ஷுவும்

80 கிலோ பிரிவில் சாஹிலும் வெற்றி பெற்றுள்ளனர்.

அரையிறுதி ஆட்டங்கள் நாளை நடைபெறுகின்றன.

